DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு ஜீலை மாதம் வியாழன்கிழமை 03ம் நாள் சாட்சியாகிய உஷா என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | உஷா | வயது | 54 |
| க/பெ. | உமாகாந்தன் | இனம் | பெண் |
| கிராமம் | திமிரி | தொழில் | உதவி ஆய்வாளர் திமிரி காவல் நிலையம் |
| சமயம் | | தாலூக்கா | |

**S.T.C.72/2024**

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர். எதிரி வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்).

**<u>முதல் விசாரணை 03.07.2025 அ.சா.3</u>**

1. நான் தற்போது திமிரி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் 01.04.2021ம் தேதி அரக்கோணம் நகர காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது மாலை 7.15 மணிக்கு தேர்தல் பறக்கும் படை அலுவலர் துரைபாபு நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று, குற்றம் பிணையில் விடக்கூடிய குற்றம் என்பதால் அரக்கோணம் நீதித்துறை நடுவரிடம் அனுமதி பெற்று இரவு 8.15 மணிக்கு நிலைய குற்ற எண்.94/2021 இதச பிரிவு 171 (இ)ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2. நான் பிறகு சம்பவயிடம் சென்று சாட்சிகள் வெங்கடேசன், விஷ்ணுரவி ஆகியோர்களை விசாரணை செய்தேன். நான் சம்பவ இடத்தில் இருந்த எதிரியிடம் இருந்து ரூபாய் 18000/–கைப்பற்றினேன். பிறகு கைப்பற்றிய சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். 01.04.2021ம் தேதி நேரம் ஞாபகமில்லை. எதிரியை காவல் நிலையத்தில் கைது செய்து தக்க பிணையில் விடுவித்தேன். **(கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், படிவம் 91 அ.சா.ஆ.5 ஆகவும், சி.பி.239/2021ல் கண்ட ரூபாய் 18000/– பணம் சான்று பொருள்–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. பிறகு நான் பட்டியல் சாட்சி 1 முதல் 3வரை விசாரணை செய்தேன். விசாரணையில் எதிரி மீது முதல் நோக்கு தோன்றியதால் விசாரணையை முடித்து நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

4. நான் தான் இந்த வழக்கின் விசாரணை அதிகாரி என்றால் சரிதான். நான்தான் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எனது கைது குறிப்பாணையில் கைது செய்யப்பட்ட நபரின் பெயர் பிரவின்நாத் என்று உள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் எதிரியின் பெயர் பிரவின்குமார் என்று உள்ளது என்றால் சரிதான். DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு ஜீலை மாதம் வியாழன்கிழமை 03ம் நாள் சாட்சியாகிய உஷா என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | உஷா | வயது | 54 |
| க/பெ. | உமாகாந்தன் | இனம் | பெண் |
| கிராமம் | திமிரி | தொழில் | உதவி ஆய்வாளர் திமிரி காவல் நிலையம் |
| சமயம் | | தாலூக்கா | |

**S.T.C.72/2024**

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர். எதிரி வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்).

**<u>முதல் விசாரணை 03.07.2025 அ.சா.3</u>**

1. நான் தற்போது திமிரி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் 01.04.2021ம் தேதி அரக்கோணம் நகர காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது மாலை 7.15 மணிக்கு தேர்தல் பறக்கும் படை அலுவலர் துரைபாபு நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று, குற்றம் பிணையில் விடக்கூடிய குற்றம் என்பதால் அரக்கோணம் நீதித்துறை நடுவரிடம் அனுமதி பெற்று இரவு 8.15 மணிக்கு நிலைய குற்ற எண்.94/2021 இதச பிரிவு 171 (இ)ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2. நான் பிறகு சம்பவயிடம் சென்று சாட்சிகள் வெங்கடேசன், விஷ்ணுரவி ஆகியோர்களை விசாரணை செய்தேன். நான் சம்பவ இடத்தில் இருந்த எதிரியிடம் இருந்து ரூபாய் 18000/–கைப்பற்றினேன். பிறகு கைப்பற்றிய சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். 01.04.2021ம் தேதி நேரம் ஞாபகமில்லை. எதிரியை காவல் நிலையத்தில் கைது செய்து தக்க பிணையில் விடுவித்தேன். **(கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், படிவம் 91 அ.சா.ஆ.5 ஆகவும், சி.பி.239/2021ல் கண்ட ரூபாய் 18000/– பணம் சான்று பொருள்–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. பிறகு நான் பட்டியல் சாட்சி 1 முதல் 3வரை விசாரணை செய்தேன். விசாரணையில் எதிரி மீது முதல் நோக்கு தோன்றியதால் விசாரணையை முடித்து நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

4. நான் தான் இந்த வழக்கின் விசாரணை அதிகாரி என்றால் சரிதான். நான்தான் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எனது கைது குறிப்பாணையில் கைது செய்யப்பட்ட நபரின் பெயர் பிரவின்நாத் என்று உள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் எதிரியின் பெயர் பிரவின்குமார் என்று உள்ளது என்றால் சரிதான்.

5. முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள நபரை மாற்றி எதிரியை கைது செய்துள்ளேன் என்றால் இல்லை. விசாரணையில் எதிரியின் பெயர் பிரவின்நாத் என்று தெரியவந்தது. எதிரியின் பெயர் பிரவின்குமார் இல்லை பிரவின்நாத் என்பதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரியின் பெயர் புகாரில் மாறுபட்டு உள்ளதற்கு ஏன் அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் பெயரை திருத்தம் செய்வதற்காக அறிக்கையை தயார் செய்தேன் ஆனால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்காமல் விடுபட்டுவிட்டது.

6. பெயர் திருத்தம் செய்துள்ளது குறித்து இறுதி அறிக்கையில் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. நான் இந்த வழக்கை பதிவு செய்ய நீதித்துறை நடுவருக்கு அனுமதி கோரி விண்ணப்பம் செய்தேன் என்றால் சரிதான். அந்த விண்ணப்பத்தில் எதிரியின் பெயர் பிரவின்குமார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால்

சரிதான். நான் அனுமதி பெற்றுதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரிதான்.

7. புகார்தாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில்தான் வழக்கு பதிவு செய்ய நான் விண்ணப்பம் கொடுத்தேன் என்றால் சரிதான். விண்ணப்பத்தில் அம்பேத்கர் நகரில் பிரவின் குமார் வாக்காளருக்கு பணம் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். புகாரில் அம்பேத்கர் நகரில் பிரவின்குமார் வாக்காளருக்கு பணம் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

8. புகாரில் அம்பேத்கர் நகர் பற்றி குறிப்பிடாதபோது நான் எதன் அடிப்படையில் பிரவின்குமார் அம்பேத்கர் நகரில் பணம் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் துரைபாபு சொன்னதன் பேரில் குறிப்பிட்டேன். துரைபாபு போலீஸ் விசாரணையில் பிரவின்குமார் அம்பேத்கர் நகரில் பணம் கொடுத்ததாக தெரிவித்துள்ளாரா என்றால் இல்லை. நான் எதிரியின் பெயரை உறுதி செய்து கொள்ளாமல் தவறான பெயரை தெரிவித்து நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்ய அனுமதி பெற்றுள்ளதால் என் மீது சட்டபடி நடவடிக்கை எடுக்கலாம் என்றால் சரியல்ல.

9. இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ள காலம் 10 ல் பணம் கைப்பற்றப்பட்டதாக தெரிவித்துள்ள நபரின் விலாசம் என்னவென்றால் எண்.52, ரங்கப்ப நாயுடு நகர், மோசூர், அரக்கோணம். எதிரி வீட்டின் முகவரி மேற்சொன்ன முகவரி என்றால் சரிதான். தேர்தல் விதிமுறைப்படி தனிநபர் ரூபாய் 50000/- பணம் எடுத்து செல்லலாம் என்றால் சரிதான். எதிரியின் வீட்டிற்கு சென்று அவரது சொந்த பணத்தை வீட்டில் இருந்து கைப்பற்றி வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

10. சாட்சிகள், பிரவின்குமார் வீட்டின் அருகே சென்று ஒளிந்து கொண்டார் என்று போலீஸ் விசாரணையில் தெரிவித்துள்ளார்கள் என்றால் சரிதான். பிரவின் குமார் ஒளிந்து கொண்ட வீட்டின் முகவரி, உரிமையாளரை விசாரித்து வழக்கில் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. சம்பவ இடத்தை காட்டும் பொருட்டு மகஜர் தயார் செய்தேன் என்றால் இல்லை.

11. இந்த வழக்கு ஜோடிக்கப்பட்ட வழக்கு என்பதால் பார்வை மகஜர் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தனிநபர் சாட்சிகளை விசாரித்துள்ளேனா என்றால் இல்லை. நான் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு

செய்தேனா என்றால் இல்லை. சாட்சிகள் போலீஸ் விசாரணையில் எதிரி வாக்காளர்களுக்கு பணம் கொடுத்ததாக தெரிவித்துள்ளார்களா என்றால் இல்லை.

12. நான் எந்த பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் இதச பிரிவு 171(இ). இதச பிரிவு 171(இ) என்ன சொல்கிறது என்றால் தேர்தலுக்காக பணம் பட்டுவாடா செய்வது குறித்து தெரிவிக்கும். லஞ்சம் கொடுத்ததற்கான தண்டனையை குறிக்கும் என்றால் சரிதான். சாட்சிகள் எதிரி லஞ்சம் கொடுத்தார் என்றோ அல்லது கொடுக்க முற்பட்டதாக தெரிவித்துள்ளார்களா என்றால் இல்லை. சாட்சிகள் லஞ்சம் கொடுத்ததாக எதுவும் தெரிவிக்காத நிலையில் எதற்காக இந்த பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்தேன் என்றால் புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்தேன். புகாரில் லஞ்சம் கொடுத்ததாக தெரிவிக்கபடாத நிலையில் எதன் அடிப்படையில் இந்த பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்தேன் என்றால் பணம் கொடுப்பதாக வந்த தகவலின் அடிப்படையில் பணம் கைப்பற்றபட்டதாக தெரிவித்ததால் அந்த பிரிவில் பதிவு செய்தேன்.

13. எனக்கு சட்டம் பற்றி தெரியாது என்பதால் தவறான சட்ட பிரிவை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் தொடர்பாக வீடியோ பதிவு கைப்பற்றினேனா என்றால் இல்லை. சாட்சிகள் வீடியோ பதிவை என்னிடம் கொடுத்ததாக நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் வீடியோ பதிவை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

14. எதிரி குற்றமற்றவர் என்றாலும், எதிரி வீட்டில் இருந்து சொந்த பணத்தை கைப்பற்றி பொய்யான புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.

5. முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள நபரை மாற்றி எதிரியை கைது செய்துள்ளேன் என்றால் இல்லை. விசாரணையில் எதிரியின் பெயர் பிரவின்நாத் என்று தெரியவந்தது. எதிரியின் பெயர் பிரவின்குமார் இல்லை பிரவின்நாத் என்பதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரியின் பெயர் புகாரில் மாறுபட்டு உள்ளதற்கு ஏன் அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் பெயரை திருத்தம் செய்வதற்காக அறிக்கையை தயார் செய்தேன் ஆனால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்காமல் விடுபட்டுவிட்டது.

6. பெயர் திருத்தம் செய்துள்ளது குறித்து இறுதி அறிக்கையில் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. நான் இந்த வழக்கை பதிவு செய்ய நீதித்துறை நடுவருக்கு அனுமதி கோரி விண்ணப்பம் செய்தேன் என்றால் சரிதான். அந்த விண்ணப்பத்தில் எதிரியின் பெயர் பிரவின்குமார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் அனுமதி பெற்றுதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரிதான்.

7. புகார்தாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில்தான் வழக்கு பதிவு செய்ய நான் விண்ணப்பம் கொடுத்தேன் என்றால் சரிதான். விண்ணப்பத்தில் அம்பேத்கர் நகரில் பிரவின் குமார் வாக்காளருக்கு பணம் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். புகாரில் அம்பேத்கர் நகரில் பிரவின்குமார் வாக்காளருக்கு பணம் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

8. புகாரில் அம்பேத்கர் நகர் பற்றி குறிப்பிடாதபோது நான் எதன் அடிப்படையில் பிரவின்குமார் அம்பேத்கர் நகரில் பணம் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் துரைபாபு சொன்னதன் பேரில் குறிப்பிட்டேன். துரைபாபு போலீஸ் விசாரணையில் பிரவின்குமார் அம்பேத்கர் நகரில் பணம் கொடுத்ததாக தெரிவித்துள்ளாரா என்றால் இல்லை. நான் எதிரியின் பெயரை உறுதி செய்து கொள்ளாமல் தவறான பெயரை தெரிவித்து நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்ய அனுமதி பெற்றுள்ளதால் என் மீது சட்டபடி நடவடிக்கை எடுக்கலாம் என்றால் சரியல்ல.

9. இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ள காலம் 10 ல் பணம் கைப்பற்றப்பட்டதாக தெரிவித்துள்ள நபரின் விலாசம் என்னவென்றால் எண்.52, ரங்கப்ப நாயுடு நகர், மோசூர், அரக்கோணம். எதிரி வீட்டின் முகவரி மேற்சொன்ன முகவரி என்றால்

சரிதான். தேர்தல் விதிமுறைப்படி தனிநபர் ரூபாய் 50000/- பணம் எடுத்து செல்லலாம் என்றால் சரிதான். எதிரியின் வீட்டிற்கு சென்று அவரது சொந்த பணத்தை வீட்டில் இருந்து கைப்பற்றி வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

10. சாட்சிகள், பிரவின்குமார் வீட்டின் அருகே சென்று ஒளிந்து கொண்டார் என்று போலீஸ் விசாரணையில் தெரிவித்துள்ளார்கள் என்றால் சரிதான். பிரவின் குமார் ஒளிந்து கொண்ட வீட்டின் முகவரி, உரிமையாளரை விசாரித்து வழக்கில் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. சம்பவ இடத்தை காட்டும் பொருட்டு மகஜர் தயார் செய்தேன் என்றால் இல்லை.

11. இந்த வழக்கு ஜோடிக்கப்பட்ட வழக்கு என்பதால் பார்வை மகஜர் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தனிநபர் சாட்சிகளை விசாரித்துள்ளேனா என்றால் இல்லை. நான் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் இல்லை. சாட்சிகள் போலீஸ் விசாரணையில் எதிரி வாக்காளர்களுக்கு பணம் கொடுத்ததாக தெரிவித்துள்ளார்களா என்றால் இல்லை.

12. நான் எந்த பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் இதச பிரிவு 171(இ). இதச பிரிவு 171(இ) என்ன சொல்கிறது என்றால் தேர்தலுக்காக பணம் பட்டுவாடா செய்வது குறித்து தெரிவிக்கும். லஞ்சம் கொடுத்ததற்கான தண்டனையை குறிக்கும் என்றால் சரிதான். சாட்சிகள் எதிரி லஞ்சம் கொடுத்தார் என்றோ அல்லது கொடுக்க முற்பட்டதாக தெரிவித்துள்ளார்களா என்றால் இல்லை. சாட்சிகள் லஞ்சம் கொடுத்ததாக எதுவும் தெரிவிக்காத நிலையில் எதற்காக இந்த பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்தேன் என்றால் புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்தேன். புகாரில் லஞ்சம் கொடுத்ததாக தெரிவிக்கபடாத நிலையில் எதன் அடிப்படையில் இந்த பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்தேன் என்றால் பணம் கொடுப்பதாக வந்த தகவலின் அடிப்படையில் பணம் கைப்பற்றபட்டதாக தெரிவித்ததால் அந்த பிரிவில் பதிவு செய்தேன்.

13. எனக்கு சட்டம் பற்றி தெரியாது என்பதால் தவறான சட்ட பிரிவை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் தொடர்பாக வீடியோ பதிவு கைப்பற்றினேனா என்றால் இல்லை. சாட்சிகள் வீடியோ பதிவை என்னிடம்

கொடுத்ததாக நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் வீடியோ பதிவை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

14. எதிரி குற்றமற்றவர் என்றாலும், எதிரி வீட்டில் இருந்து சொந்த பணத்தை கைப்பற்றி பொய்யான புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.